29th January 1972]

Stray cattle

•53 *Q.*—THIRU G. SWAMINATHAN and THIRU M. ARUMUGASWAMI: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that stray cattle are posing considerable traffic problem in Madras City; and

(*b*) if so, the action taken thereon?

பாாரியாய்த் திரியும் கால்நடைகள்

திரு. ஜி. சுவாமிநாதன் & திரு. எம். ஆறுமுகசாமி: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகரில் பாாரியாய்த் திரியும் கால்நடையால் போக்கு வரத்துத் தொல்லை இருந்து வருவது என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அது குறித்து மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) சென்னை மாநகரில் உள்ள சாலைகளில் கால்நடைகள் பாாரியாய்த் திரிவது காணப்படுகின்றது. ஆயினும் இவற்றினால் போக்குவரத்துக்குக் கணிசமான அளவுக்கு இடையூறு ஏற்படுவ தில்லை. சில நேரங்களில் கொஞ்சம் இடையூறுகள் ஏற்படவும் செய்கின்றன.

(இ) பாாரியாய்த் திரியும் கால்நடைகள் வளைத்துப் பிடிக்கப்பட்டு, சென்னை மாநகரில் பல்வேறு காவல் நிலையங்களோடு இணைக்கப்பட்டுள்ள கால் நடைப் பட்டிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. சென்னை மாநகர் காவல் துறைச் சட்டத்தின் 71-வது பிரிவின் (ix) பகுதியின் கீழ், கால்நடை உரிமை யாளர்கள் மீது வழக்குகள் தொடரப்படுகின்றன. குற்றவாளிகள் என்று தீர்மானிக்கப்படுகிற கால்நடை உரிமையாளர்கள் அபராதம் விதிக்கப்படு கின்றனர்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, வெளிநாடுகளில் இதுபோன்ற கால்நடைகளை நகரங்களிலிருந்து ஐந்து அல்லது பத்து மைல் தூரத்திற்கு அப்பால் வைக்க வேண்டுமென்று சட்டத்தை இயற்றி அதன் காரணமாக கால் நடைகள் நகரத்திற்குள் வராமல் தடுத்திருக்கிறார்கள். அது போன்ற ஏற்பாட்டை அரசு செய்ய முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: உரிமை கோரப்படாத கால்நடைகளை சென்னை நகரத்திற்கு வெளியே உள்ள கால்நடைப் பண்ணைக்கு அனுப்பி வைக்க லாமா என்று மாநகராட்சி மன்றம் யோசித்து, அதுபற்றி வெளியிலுள்ள அந்தப் பண்ணை நிர்வாகிகளுக்குக் கடிதம் எழுதியிருக்கிறது. பதில் எதிர்பார்க்கப்படு கிறது. தக்க பதில் வந்த பிறகு கால்நடைகளை அங்கே அனுப்ப ஏற்பாடு செய்யப்படும்.

திரு. எம். ஆறுமுகசாமி: இது வரையில் அம்மாதிரிப் பிடிக்கப்பட்ட கால் நடைகளைத் திரும்பக் காவல் நிலையத்திற்குக் கொண்டு போன பிறகு விட்டு விடப்படுகிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அபராதம் வசூலிக்கப்பட்ட பிறகு விடப்படுகிறது. அப்படி ஆயிரக்கணக்கான ரூபாய் அபராதமாகவும் வசூலிக்கப் பட்டிருக்கிறது.

[29th January 1972

திரு. எம். ஆறுமுகசாமி : அன்-க்ளெய்ம்டாக ( ) இருந்த மாடுகள் சும்மா திருப்பி விடப்படுவதாக அறிகிறேன். அது உண்மையா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கால்நடைகளில் கன்றுகளாக உள்ள வற்றை அவ்வாறு பிடித்தால் அவற்றை எஸ்.பி.சி.ஏ. மூலமாக பெரம்பூருக்குப் பக்கத்தில் ஒரு பாதிரியார் நடத்துகின்ற மடாலயத்திற்கு 200 கன்றுகள் வரையில் அவர் வளர்ப்பதற்கு ஒப்புக்கொண்டிருப்பதால், அனுப்பப்படுகின்றன. வயதான மாடுகளுக்குச் சரியான போக்கிடம் இன்னும் கிடைக்கவில்லை.

திரு. கே. ராஜாராம் : உரிமம் பெறாத 'ஸ்ட்ரே காட்டில்' என்பவற்றிற்கு அபராதம் கட்டுகிறார்களே, அவர்கள் அந்த மாடுகளுக்குச் சொந்தக்காரர்களாகத் தானே இருக்கவேண்டும். அப்படிப்பட்ட மாடுகளை ஊருக்கு அப்பால் ஐந்து மைலுக்கு அப்பால் ஏதேனும் பண்ணை வைத்து அங்கே கொண்டுபோய்ச் சேர்க்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : உரிமம் கோரப்படாத மாடுகள் என்று சொன்னேன். அதற்குச் சொந்தக்காரர்கள் இல்லாத என்றுதான் பொருள். அந்தப் பொருளில்தான் சொன்னேன். சொந்தக்காரர்கள் இருந்தாலும், அபராதம் குறைவாக இருப்பதால், 50 காசு ஒரு ரூபாயாக இருப்பதால் வெள்ளாடு, செம்மறி ஆடு, பன்றிகளுக்கு 50 காசும் மற்றவைகளுக்கு ஒரு ரூபாய் என்றும் இருப்பதால் அதைக்கட்டி மீட்டுக்கொண்டு போய் மறுபடியும் விட்டுவிடுகிறார்கள். சொந்தக்காரர்களுக்கு அக்கால்நடைகளைப் பராமரிக்கத் தகுந்த தொழுவமோ வேறிடமோ இல்லை. அதனால் வெளியே விட்டுவிடுகிறார்கள். ஒரு ரூபாய்தானே என்று செலுத்திவிடுகிறார்கள். முதலில் உரிமம் இல்லாத, சொந்தக்காரர்கள் இல்லாத கால்நடைகளைப் பிடித்து வெளியில் உள்ள பண்ணைக்கு அனுப்ப மாநகராட்சி மன்றம் யோசித்து வருகிறது.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : உரிமம் கோரப்படாத கால்நடைகள் இப்போது அரசாங்கப் பொறுப்பில் எத்தனை இருக்கின்றன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எத்தனை தேவை என்று சொன்னால், கணக்குப் பார்க்கலாம்.

Complaints pending in the office of the Director of School Education, Madras

* 54 *Q.*—THIRU M. ARUMUGASWAMI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) the details of the complaints pending in the Office of the Director of School Education, Madras referred to it by the complaints cell of the Secretariat; and

(*b*) the stage at which the matters stand at present ?

பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்தில் முடிவுபெறாமல் உள்ள புகார்கள்

திரு. எம். ஆறுமுகசாமி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தலைமைச் செயலகப் புகார்ப் பிரிவு, பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அனுப்பி, அவரது அலுவலகத்தில் முடிவுபெறாமல் உள்ள புகார்களின் விவரங்கள் யாவை ?

(இ) இவை தற்போது எந்த நிலையில் உள்ளன ?